நாமக்கல் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்

வெண்ணந்தூர் ஊராட்சி ஒன்றியம்

நாமக்கல் மாவட்டம் இராசிபுரம் வட்டம் ,வெண்ணந்தூர் ஊராட்சி ஒன்றியம் ,கீரனூர் ஊராட்சி /கிராமம்.
ச.எண் : 41/6A - ல் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவுக்கான தொழில் நுட்ப ஒப்புதல் வரைபடம்.
(திட்டமில்லா பகுதி) (கோப்பு எண்:2766/2018-சேம-3-ன் திருத்திய வரைபடம்)

அளவு : 1: 400

கோப்பு எண் : 155 /2020-நாமா

குறிப்பு :

மனைப்பிரிவின் மொத்தப்பரப்பளவு	:	1.68 ஏக்கர் (அ) 6799.00 ச.மீ
கோரிய மனைகள்	:	30
ஒதுக்கிய மனைகள்	:	30
மனைப்பிரிவு சாலைகளின் மொத்தப்பரப்பு	:	24514.875 ச.அடி (அ) 2277.50 ச.மீ.

மனைப்பிரிவின் எல்லை .....

நிலையில் உள்ள சாலை .....

மனைப்பிரிவு சாலை .....

சாலை விஸ்தரிப்பு .....

பொது ஒதுக்கீடுகள்:

ஒதுக்கப்பட வேண்டிய பூங்காவிற்கான பரப்பு = (மனைப்பிரிவின் மொத்தபரப்பு - சாலைகளின் மொத்தபரப்பு) x (10/100)

= (6799.00 -2277.50) x 10/100 = 452.15 ச.மீ.

அரசாணை எண் 18-ன் நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை நாள் 4.2.2019-ன் படி பூங்காவிற்கான தொகையை அரசு வழிக்காட்டி மதிப்பின்படி 460.00 ச.மீ-க்கான தொகை செலுத்தப்பட்டுள்ளது.

ஒதுக்கப்பட வேண்டிய மின்பகிர்மானம் மற்றும் பொது உபயோகம் = (மனைப்பிரிவின் மொத்தபரப்பு - சாலைகளின் மொத்தபரப்பு) x (1/100)

= (6799.00-2277.50) x (1/100) = 45.22 ச.மீ

ஒப்படைக்கப்பட்ட மின்பகிர்மானம் மனையின் பரப்பு : 31.47 ச.மீ (0.70 %)

ஒப்படைக்கப்பட்ட பொது உபயோகம் மனையின் பரப்பு : 32.50 ச.மீ (0.72 %)

கட்டிட வரம்பு : 30 & 33 அடி அகல சாலைக்கு 10.0 அடி.


மூலை முடக்கு : 30 & 33 அடி அகல சாலைக்கு 5 x 5 அடி.

: 40 அடி அகலத்துக்கு மேல் உள்ள சாலைகளுக்கு 10.0 X 10.0 அடி.

நிபந்தனைகள் :

1. அரசாணை எண் : 18-ன் நகராட்சி நிர்வாகம் (ம)குடிநீர் வழங்கள் துறை நாள்:04-02-2019 -ன்படி மனைப்பிரிவில் அமையும் சாலை பொது உபயோகம் (ம) பூங்கா ஒதுக்கீட்டினை உள்ளாட்சி தானமாக பெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
2. அரசாணை எண் : 134, ஊரக வளர்ச்சித்துறை துறை நாள் :16.06.2003 -ன் படி நில உரிமம் குறித்து உள்ளாட்சி நிர்வாக அதிகாரி முழுத் திருப்தியில் உள்ளது எனச் சான்றளித்ததன் பேரில் இம்மனைப்பிரிவிற்கு தொழில் நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.
3. இம்மனைப்பிரிவிற்கு உள்ளாட்சி இறுதி ஒப்புதல் அளிக்கும் முன் இடத்தினை எந்தத் துறையாலும் நில ஆர்ஜித நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றும், எந்தத் துறைக்காகவும் நில ஆர்ஜிதப் பட்டியல் மாவட்ட வருவாய் அலுவலருக்கு அனுப்பப்படவில்லை என்றும் உள்ளாட்சி உறுதி செய்ய வேண்டும்.
4. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்குச் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டாலோ மனைப்பிரிவிற்குத் தொழில் நுட்ப ஒப்புதல் வழங்கியதில் ஏதேனும் பாதிப்பு ஏற்படக் கூடிய சூழ்நிலை ஏற்படின் இம்மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட தொழில் நுட்ப ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்புமின்றி நகர் ஊரமைப்பு இயக்குநர்/ஆணையர் அவர்களால் இரத்து செய்யப்படும்.
5. விற்பனைக்குண்டான மனைகளை விற்பனை செய்யும்போது இவ்வாணையின் நகலோடு நகர் ஊரமைப்புத்துறையில் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபடங்களையும் மனை வாங்குபவர்களுக்கு காட்டாயம் வழங்கப்பட வேண்டும்.
6. நகர் ஊரமைப்புத் துறை சட்டப்பூர்வமாக தொழில்நுட்ப அனுமதி அளிப்பதின் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை. தொழில் நுட்ப அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்பித்த ஆவணங்களில் (கிரையப்பத்திரம், குத்தகை பத்திரம், தானப்பத்திரம், பொது அதிகார பத்திரம் மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது. அதன்மூலம் முதற்கட்டமாக விண்ணப்பதாரருக்கு வளர்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது.
7. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை எவ்வித மாற்றமும், விடுதலின்றி மனைப்பிரிவு நுழைவாயிலில் 6' x4' அளவிலான நிரந்தரத் தகவல் பலகை மூலம் பொது மக்கள் பார்வைக்கு நிரந்தரமாக வைக்கப்பட வேண்டும்.
8. உத்தேச மனைப்பிரிவு இடத்தில் நீதிமன்ற வழக்கு ஏதேனும் நிலுவையில் இருப்பின் இத்துறையின் மனைப்பிரிவு அனுமதி செல்லத்தக்கது அல்ல.
9. உத்தேச மனைப்பிரிவின் உள்ளே HT Line, LT Line ஆகியன செல்லுமானால் அவைகளை சாலையின் போக்கிற்கு ஏற்றவாறு மாற்றியமைக்கப்பட வேண்டும்.
10. உத்தேச மனைப்பிரிவின் உள்ளே நீர்நிலைகள் அமையுமானால் அதற்கு பாதிப்பு ஏற்படாதவாறு கட்டிடங்கள் கட்டப்பட வேண்டும்.

ம.வ/நாமா எண் : 47/2021



அளவர்/ உதவி வரைவாளர்

வரைவாளர் நிலை - III

மேற்பார்வையாளர்

உதவி இயக்குநர்
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்
நாமக்கல்.